★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55690

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 21உ செவ்வாய் (6—11—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 22உ புதன் (7—11—56) [இதழ் 127

வயல்களில் நாற்று நட இயந்திரம்!

நாற்று நடுவதற்கான இயந்திரம் ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனராம்!

பல நூற்றாண்டுக்காலமாக இலட்சோப இலட்சம் சீன விவசாயிகள், கையினாலேயே நாற்று நட்டு வந்திருக்கின்றனர். இப்போது அவர்கள் செய்துவந்த வேலையைச் செய்ய இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

காங்கிங் நகரில், இந்தப் புதிய இயந்திரத்தினால் நாற்று நடும் முறை பரிசோதிக்கப்பட்டு வெற்றி பெற்றிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய வியாபாரிகளின் பேராசை எதிரொலி

சென்னையில் மகளிர் மன்றத் துவக்க விழா

அண்ணா கலந்துகொண்டு சிறப்பித்தார்

(நமது தனி நிருபர்)

சென்னை, நவ. 6—

மகளிர் மன்றத் துவக்கவிழா சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் 4-ந்தேதியன்று மாலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவில் சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பெண்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்டனர்.

துவக்கத்தில், தோழியர் ஜி. கஸ்தூரி அவர்கள் கழகப் பண் பல பாடினர்.

அடுத்து தோழியர் வெற்றிச்செல்வி—அன்பழகன் அவர்கள் மகளிர் மன்றத்தின் நோக்கத்தினைச் சுருக்கமாக விளக்கி அனைவரையும் வரவேற்று அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் மகளிர் மன்றத்தினைத் துவக்கி வைத்து மிகச் சிறப்பானதோர் கருத்துரை வழங்கினார்கள். மூதாட்டியாரின் உடல் தளர்ந்திருந்தபோதும், நீண்ட பிரயாணத்தை மேற்கொண்டு, சென்னைக்கு வந்து, மகளிர் மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசியது, அவர்களின் உள்ளம் இன்னும் தளரவில்லை—பொதுப் பணியாற்றுவதற்கு என்பதைத்தான் எடுத்துக் காட்டியது.

அடுத்தாற்போல், தோழியர்கள் புவனேசுவரி-நடராசன் அவர்களும், சத்தியவாணி-முத்து அவர்களும், மூதாட்டியார் அவர்களுக்கும், டாக்டர்-தருமாம்பாள் அம்மையாருக்கும் பாராட்டு இதழ்களை வாசித்தளித்தனர்.

அடுத்து மன்றத் தலைவி தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் வேண்டியதற்கொப்ப, விழாவிற்கு டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

அவர்களும், உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, விழாவிற்குத் தலைமை ஏற்று, அரிய கருத்துரைகளை வழங்கினார்கள்.

பின்னர், சிறுமி இராணியின் 'கண்ணகி' நடிப்பு நடைபெற்றது; பலரின் பாராட்டுதலும் அந்தச் செல்விக்குக் கிடைத்தது

அடுத்தாற்போல் பேசிய தோழியர் பங்கையர்ச்செல்வி, சங்க காலத் தமிழ்ப் பெண்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டினர். கருத்துமிக்க அவரது சொற்பொழிவு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பின்னர், தோழியர் ஜகஜ்ஜோதி-நாகராசன் சிறிது நேரம் பெண்களின் முன்னேற்றம் குறித்துப் பேசினர்.

அடுத்தாற்போல தோழியர் ஜி. பி. அமுதா, 'பெண்கள் சமூகம் இந்த நாட்டில், கல்லாய், மண்ணாய் மதிக்கப்பட்டு, நடைப்பிணங்களாக உலவுவதேன்?' என்ற கேள்வியை எழுப்பி பெண்கள் சமூக விடுதலை பெற வேண்டிய அவசியத்தை விளக்கி அழகான உரை நிகழ்த்தினர்.

அடுத்து, மாணவி சற்குணம் உணர்ச்சிமிக்கதோர் உரை நிகழ்த்தி, எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்று பலரும் கூறும் வண்ணமிருந்தது அவரது பேச்சு!

பின்னர், தோழியர்கள் வே. கோவிந்தசாமி, கமலா-பாலசுந்தரம் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து தோழியர் துரையம்மாள்-சிவப்பிரகாசம் கருத்துமிக்க உரை ஒன்று நிகழ்த்தினர்.

பின்னர், இராணி-அண்ணாதுரை அவர்கள், 'மகளிர் மன்றம், லேடீஸ் கிளப் அல்ல' என்ற நிலையை விளக்கி, மன்றம் மேற்கொள்ளவேண்டிய மகத்தான பணிகளை விளக்கி, சிறப்பானதோர் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, தோழியர் அருண்மொழி-வில்வம் அவர்கள் வரப்போகும் தேர்தலில், பெண்களின் பங்கு எத்தகையது என்பதை விளக்கிப் பேசினர்.

மன்றத் தலைவி தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், பெண்களின் முன்னேற்றத்தில் தான் நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது என்பதை வலியுறுத்தி அரிய விளக்கம் தந்ததோடு, 'பெண்களுக்கு வாய்ப்புகள் தரப்பட்டால், ஆண்களைவிடச் சிறப்பான பணியாற்ற முடியும் என்பதைக் காட்டுவோம்,' என்று பேசினர்.

பின்னர், மீண்டும் ஓர் முறை செல்வி இராணிவசந்தி மேடைக்கு வந்து, தனது நவரச நடிப்பை எடுத்துக்காட்டும்வண்ணம் இரண்டொரு காட்சிகளை நடித்துக்காட்டி மீண்டும் பலருடைய பாராட்டினையும் பெற்றார்.

இறுதியாக அண்ணா அவர்கள் மகளிர் மன்றத் தோற்றத்தை வரவேற்றும், மன்றம் ஆற்றவிருக்கும் பணிகளை அங்கீகரித்தும், மன்றத்தில் பணியாற்ற வந்துள்ளோரின் ஆர்வத்தைப் பாராட்டியும், மகளிர் மன்றங்கள் இன்றைய நிலையில் எத்தகைய அவசியமான அமைப்பு என்பதை விளக்கியும் அவர்களுக்கே உரித்தான பாணியில் சிறப்பான பேருரை ஒன்றினை வழங்கினார்கள்.

வியட்நாம் தேசீய உணர்வு தீவிரமாகிறது

இந்திய வியாபாரிகளின் எதிர்காலச் சுரண்டலுக்குப் பேரிடி!

தாய் நாடு திரும்ப வேண்டிய கட்டாயம் உருவாகிறது

செய்கோன், அக். 6—

தெற்கு வியட்நாம் நாட்டில் துணி வியாபாரம் செய்து வரும் பெரும்பான்மையினரான இந்திய வியாபாரிகளுக்கு புதிய தொல்லை ஏற்பட்டு இருக்கிறது.

இந்தத் தொல்லைக்குப் பெரிதும் காரணமாக இருப்பது இந்திய வியாபாரிகளின் இலாபப் பேராசையேயாகும் எனக் குறிப்பிடப்படுகிறது

இருந்தாலும், அந்த நாட்டில் தோன்றியுள்ள தேசீய உணர்வின் விளைவாகவும் இப்புதிய தொல்லை உருவாகி வருகிறது எனச் சொல்லப்படுகிறது.

செய்கோன் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைகளுக்குக் கூடுதலாக இந்திய வியாபாரிகள் பலவகைத் துணிகளை விற்று வருகின்றனர் என்பது விளக்கமாகத் தெரிகிறது.

அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைகளின்படி வியாபாரிகள் துணிகளை விற்கிறார்களா, இல்லையா என்பதை மூன்று திங்களுக்கு ஒருமுறை, அதற்கென நியமிக்கப்பட்டுள்ள 'பொருளாதார போலீஸ்' வியாபாரிகளின் கணக்குகளைப் பரிசோதித்து வருகிறது.

இம்முறை, வியாபாரிகளிடை அதிருப்தியையும், பொது மக்களிடை திருப்தியையும் கொடுத்துள்ளது.

பெரிய பெரிய வியாபார நிலையங்களில் 'கியூ' வரிசையில் மக்கள் நின்று, தங்களுக்கு வேண்டிய ஆடை வகைகளை வாங்கி வருகின்றனர்.

இதன் பலனாக, கைவசமுள்ள துணிகள் விரைவில் விற்கப்பட்டு, மேலும் இறக்குமதியாகும்வரை கடைகளை மூடிவைத்திருக்கவேண்டுமே என்று வியாபாரிகள் கவலைகொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அரசாங்கத்திடம் தீவிரமாகி வரும் தேசீய முனைப்பின் காரணமாக, வரவர, வியாபாரம் செய்வது சாத்தியமில்லாது போகக்கூடும் என்ற அச்சம் இந்திய வியாபாரிகளை அரட்டிக்கொண்டே இருக்கிறது.

டில்லியின் உத்தரவு

எதிர்பார்க்கப்படுகிறதாம்!

பட்டுக்கோட்டை, நவ. 1—

புதிய மாநில அமைப்பின் காரணமாக மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ் நாட்டிலிருந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று விட்டதால், முத்துப்பேட்டையில் ஓர் தேங்காய் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்காக டில்லி சர்க்கார் உத்தரவு எதிர்பார்க்கப்படுவதாகவும் மாநில விவசாய டைரக்டர் கூறியுள்ளார்.

22 மைல் நீளமுள்ள கால்வாய் திறப்பு

20,000 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்

திருவண்ணாமலை, நவ. 5—

சாத்தனூர் பிரதான கால்வாய், அக். 30-ந் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது

திருவண்ணாமலையிலிருந்து 22 மைல் தூரத்தில் இதன் அணை உள்ளது—அதாவது, நீளம் 2,558 அடி. இதனால் 20,000 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாம்.

எவ்வளவு தாராளம்!

புதுடில்லி, நவ. 2—

சென்னை மாநிலத்தில், 1956—57 ஆண்டில், மண்சத்து பாதுகாப்புக்கான இரு திட்டங்களுக்காக டில்லி சர்க்கார் ரூ 1,18,000 மானியமும், ரூ. 9,75,000-த்திற்கு இரு கடன்களும் அனுமதித்துள்ளதாம்.

தபால்—தந்தி இலாகா ஊழியர்களின் உபயோகத்துக்காக சர்க்கார் கட்டியிருக்கும் வீடுகளின் மொத்த எண்ணிக்கை 1956 மார்ச்சில் 8,412 ஆக இருந்தது. ஏப்ரில்-செப்டம்பர் மாதங்களில் மொத்தம் 6,212 வீடுகள் இருந்தன.

'பெருமையை இழந்து விட்டோம்'

'சர்க்காரின் செயல் விவேகமற்றது; கயமைத்தனமானது'

'பதவியிலிருந்து பிரதமர் ஈடன் வெளியேற வேண்டும்'

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் இடிமுழக்கம்

லண்டன், நவ. 4—

"எகிப்தில் பிரிட்டன் தலையிட்டது, சர்க்காரின் விவேகமற்ற கயமைச் செயலாகும்," என்று, பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவர் கெயிட்ஸ்கெல், வானொலியில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"இது, பிரதமர் ஈடன் கூறுவது போல போலீஸ் நடவடிக்கை அல்ல! சந்தேகமில்லாமல் யுத்தம்தான்! சட்டத்தை நாமே அமுல் நடத்த முற்படுவது கூடாது. இந்த நிலைக்கு இன்று, பிரிட்டிஷ் மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, பிரிட்டிஷ் பிரதமர் உடனே இராஜிநாமாச் செய்யவேண்டும்; கன்சர்வேடிவ் கட்சியினர் இதுபற்றிச் சிந்தித்தாக வேண்டும்; ஐ. நா. தீர்மானத்தை மதிக்கக்கூடிய - எகிப்தில் யுத்தத்தை நிறுத்தி படைகளைத் திரும்பப் பெறக் கூடிய ஒரு புதிய பிரதமரை கன்சர்வேடிவ் கட்சியினர் தேர்ந்தெடுப்பார்களேயானால், அவருக்கு ஆதரவு நல்க நாங்கள் தயாராகவிருக்கிறோம்," என்றும், கெயிட்ஸ்கல் கூறியிருக்கிறார்.

பெருமையை இழந்தோம்

"விடுதலை பெற விரும்பும் ஹங்கேரி மக்களைக் காட்டுமிராண்டித்தனமான வகையில் ரஷ்யா அடக்கி ஒடுக்கி வருவதுபற்றிய நெஞ்சு வெடிக்கும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன; ஆனால் இதைக் கண்டிக்கக் கூடிய பெருமை மிகுந்த தலைமையை நாம் இழந்து நிற்கிறோம்—நமது விவேகமில்லாத படுபாதகச் செயலால்!

"நாம் எந்தவித வாதமும் புரியாமல் நிபந்தனையும் விதிக்காமல் ஐ. நா. பொதுச்சபையின் போர் நிறுத்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டாக வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் — ஆசிரியர்: இரா.நெடுஞ்செழியன்

சென்னை • 6—11—'56 • செவ்வாய்

தேர்தல் நிதி தாரீர்!

பொதுத் தேர்தலில் நமது திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டுச் சட்டசபைக்கு 150 தொகுதிகளில் போட்டியிடவிருக்கிறது என்ற செய்தி பொதுவாக எல்லா ஜனநாயகவாதிகளுக்கும், குறிப்பாகக் கழகத்திற்கு நாள்தோறும் வளர்ச்சியைத் தேடித்தந்து வரும் கழகத் தோழர்களுக்கும் பெருமகிழ்ச்சியூட்டுவது இயற்கையே.

ஜனநாயகம் என்ற வளரும் நலன்கள் அனைத்தையும் மக்களுக்குத் தேடித்தரும் ஓர் நல்லாட்சி முறையிலுள்ள தவிர்க்க முடியாத சில குறைபாடுகளைப் புகலிடமாகக்கொண்டு அந்த ஆட்சிமுறைக் கோட்பாட்டினையே பழிப்பவர்களும், இந்த ஜனநாயகம் என்ற புனிதமான கோல்முறைக் கோட்பாட்டினைப் பெயரளவில் பாராட்டி, அதில் பங்கு பெற்றுக் கொண்டே அம்முறைக்குச் சவக்குழி தோண்டும் சண்டாளர்களையும் தவிர ஏனைய நல்லோரெல்லாம் நமது முயற்சியைப் பாராட்டவும், கண்டு பெருமையும், களிபேருவகை கொள்ளவும் கடமையுடையவர்களாவர்.

கழகம் வளர்ந்திருக்கிறது, மக்களிடை! தோழர்கள் கழகத்தின்பால் மக்களது ஆதரவினை ஈர்த்திருக்கிறார்கள்—கழகத்தின் நேரிய இலட்சியத்தையும், சீரிய கொள்கைகளையும் காட்டி, கடந்த ஏழாண்டுகாலத்தில்! இந்த வளர்ச்சியைத்தான் பிரதானமான அடிப்படையாக கொண்டு, 150 இடங்களுக்குப் போட்டியிடலாம் என்ற முடிவை கழகத் தலைமையினர் மேற்கொண்டுள்ளனர்.

ஜனநாயகம் செழிப்போடு வாழ்வதற்குக்கூட அல்ல—சாதாரணமாக ஜீவிப்பதற்கே—உயிரோடிருப்பதற்கே—ஆளும் கட்சிக்கு அச்சமூட்டக்கூடிய திடமான எதிர்க் கட்சி வேண்டும் என்பது, ஆச்சாரியார் போன்ற மிக மட்டரகமான பிற்போக்குவாதிகளாலும்கூட ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இந்த இன்றியமையாத் தேவையைப் பூர்த்திசெய்ய தமிழ்நாட்டு அரசியலில், எந்த ஒரு கட்சியும் முயற்சித்ததில்லை — முயற்சிக்க முடியவில்லை; அல்லது, முயற்சித்த இரண்டொரு கட்சியினர் முழுத் தோல்வியடைந்திருக்கின்றனர் என்றுதான் கூற வேண்டும்.

கடந்த ஒன்பதாண்டுக்காலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு, அகில இந்திய ரீதியிலும் சரி, தமிழ்நாட்டைப் பொறுத்தும் சரி ஒரு வலுவான எதிர்க் கட்சி இல்லாக் குறை, காங்கிரசாருக்கு மிகுந்த பலம் தந்து வந்திருக்கிறது என்பதும் மிகையல்ல.

எதிர்க்கட்சியினர் என்ற பெயரில் இதுவரை தமிழ்நாட்டில் பணியாற்றி வந்துள்ளவர்கள், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக, மக்களுடைய பிரச்சினைகளுக்கு—அவர்களது விருப்பத்திற்கு ஒத்த—அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய தெளிவான பரிகாரங்களை எடுத்துரைத்து அவற்றிற்காகப் போராடுபவர்களாக இல்லாமற் போனார்கள். அது மட்டுமின்றி, இந்த நாட்டு மக்கள், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளது சேவலமான சுரண்டல் நோக்கங்களுக்கும், ஆதிபத்திய வெறிச் செயல்களுக்கும், அநீதியான ஆக்கினைகளுக்கும் இரையாக்கப்பட்டுவரும் கொடுமை குறித்துக் கிஞ்சிற்றும் கவலைப்படாதவர்களாக, அந்தக் கொடுமையை எறெடுத்துப் பார்க்கவும் மறுக்கும் பிடிவாதக்காரர்களாக இருந்துவந்திருக்கிறார்கள்—இன்னும் அப்படியே நீடிக்கிறார்கள்!

அதுவும் மட்டுமின்றி, ஆட்சியில் அமர்ந்திருக்கிற பொறுக்கி எடுத்த பிற்போக்காளர்களான காங்கிரசாரிலேயேகூட பலருக்குப் புலப்பட்டுவிட்ட வடவரின் ஏகாதிபத்திய ஓரவஞ்சனைகளால் தென்னாட்டவருக்கு நேர்ந்துவரும் பெரும் நட்டங்களையும், அந்த 'எதிர்க்கட்சியினர்' என்ற சிறந்த இடத்தில் அமர்ந்திருக்கும் 'முற்போக்காளர்' எனப் பெயர் பூண்ட புண்ணியவான்கள் உணராதவர்போலவே இன்னும் நடித்துவருகிறார்கள்.

இந்த நிலையில்தான் தமிழக அரசியலில் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய புனிதமானதோர் கடமையைக் கழகத்தின் தோள்களில் சுமத்தியுள்ளனர் தமிழக மக்கள்.

அவர்களது நம்பிக்கைக்கு உரியவர்களான நாம்தான், தமிழக அரசியலில் ஜனநாயகம் தழைக்கச்செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும். இதிலிருந்து நாம் விலகிச் சென்றுவிடுவது, தமிழ் மக்கள், கழகத்தின்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குத் துரோகமிழைப்பதாகும்.

நாம் மேற்கொண்டுள்ள பொறுப்பு புனிதமானது—மகத்தானது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் கழகத் தோழர்கள் தங்களது முழுத் திறனுடனும் ஈடுபடுவார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

மகத்தான பொறுப்பேற்கும் வலிவையும் பொலிவையும் நமக்கு அளித்துள்ள தமிழ் மக்கள் நாம் அந்தப் பொறுப்பினைச் சரிவர நிறைவேற்றவும் துணை நிற்பார்கள் என்பதிலும் ஐயமில்லை.

ஆனால், நமக்கு இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான வசதிகளை இனித்தான் தேடிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்தி, கழகத் தோழர்கள், அவர்கள் நம்மீது காட்டும் ஆர்வத்தினை வெள்ளித் தோட்டாக்களாக உருவாக்கி, தலைமைக் கழகத்திற்கு அனுப்பித் தருவதுதான், நாம், தேர்தலுக்காக இப்போது மேற்கொள்ள வேண்டிய முதற் பணியாகும்.

இதனைத் தெளிவாக விளக்கி, 'தேர்தல் நிதி தாரீர்' என்று நமது பொதுச்செயலாளர் விடுத்துள்ள அறிக்கையை, கண்ணியப்படுத்த வேண்டும்—கண்ணியம் காக்கும் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும்!

ஜனநாயகம் தழைக்க, மக்கள் உண்மையான விடுதலையோடுகூடிய நல்வாழ்வு பெற, கழகம் மேற்கொண்டுள்ள இந்தத் தேர்தல் போராட்டத்தில் வெற்றி கிடைக்கச் செய்வதற்குத தோழர்களின் சிந்தை, அணு ஒவ்வொன்றும் வேலை செய்யட்டும்!

காலம் பொன்னானது—போய்க்கொண்டே இருப்பது! இறக்கை கட்டிப் பறந்து விடுவன நாட்கள்! விரைவீர், தோழரே! விரைவீர்!

4-இலட்சம் ஏகரா தென்னை நிலங்கள்

தமிழ் மாநில எல்லையை விட்டுச் சென்றுவிட்டதாம்

1-இலட்சம் ஏகராதான் மிச்சமா?

கோவை, நவ. 5—

சென்னை மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களை அபிவிருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்கவும், தென்னங் கன்றுகளை ஏராளமாகப் பயிரிட்டு தஞ்சை மாவட்ட மக்களுக்கு விநியோகம் செய்யவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதற்கான வேலைகள் செய்து வரப்படுகின்றனவாம்.

எண்ணெய் வித்துக்கள் கமிட்டியும் தமிழ்நாட்டு மாநில சர்க்காரும் சேர்ந்து, ரூ. 1,88,500 மதிப்புள்ள திட்டமொன்று தயாரித்து எண்ணெய் வித்துக்களைத் தயாரித்து வருகிறார்கள்.

மலபாரும், தென் கன்னடமும் பிரிந்து செல்லுவதன் காரணமாக தென்னை மரங்கள் பயிராகும் சுமார் நான்கு இலட்சம் ஏகராக்கள் சென்னை எல்லையைவிட்டுச் சென்றுவிட்டது; ஒரு இலட்சம் ஏகராக்கள்தான் தமிழ்நாட்டு மாநிலத்தில் இருந்தவரும். ஆகவே பட்டுக்கோட்டையில் ஓர் தென்னங் கன்று பண்ணை நடத்தப்பட்டு வருகிறது; ஆண்டுதோறும் 30,000 நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. புயலினால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட மக்களுக்கு ஆண்டுதோறும் 1,50,000 தென்னை நாற்றுகள் விநியோகம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம்

புதிய மாநில அமைப்பில், நவம்பர் முதல் தேதி முதல் திருகொச்சி தமிழ்ப் பகுதிகளான தோவாளை, கல்குளம், அகஸ்தீசுவரம், விளவங்கோடு ஆகிய நாலு தாலுக்கள் சென்னை மாநிலத்தில் சேர்க்கப்பட்டு, கன்னியாக்குமரி மாவட்டமாகி இயங்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் 35 மைல் நீளமுள்ளது; பரப்பளவு 646 சதுர மைல்கள்; மக்களின் தொகை 8,37,000; 64 கிராமங்கள் உள்ளன.

சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு பாண்டிய மன்னர்களின் ஆட்சி நிலவியது.

ஒன்பதாவது நூற்றாண்டுக்குப் பிறகு திருவாங்கூர் மன்னர்களின் ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டம் இருந்து வந்தது; 1949-ல், திருவாங்கூர்-கொச்சி இணைப்புக்குப் பிறகு தலைநகராகத் திகழ்ந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு நகரசபைகளும், நான்கு பஞ்சாயத்துக்களும் உண்டு.

இரண்டு கல்லூரிகள், 4 ஆசிரியர்கள் பயிற்சி நிலையங்கள், 40 உயர்தரப் பள்ளிகள், 69 மத்தியதரப் பள்ளிகள், 461 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன.

இங்கு 2 போலீஸ் சூப்பிரண்டெண்டுகள், 2 சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் 14 சப்-இன்ஸ்பெக்டர்களும், 76 தலைமைப் போலீசாரும், 563 போலீசாரும் உள்ளனர்.

தலைமைத் தபால் நிலையம் நாகர்கோவிலில் உள்ளது.

மலேயாவுக்கு அடுத்தபடியாகக் கூறவேண்டுமானால் இங்குதான் சிறந்த இரப்பர், தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. சுமார் 21 தோட்டங்களில் 5,000 தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர்.

உப்பளத்தில் சுமார் 2,500 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

பனந்தும்புத் தொழில், குளிச்சல் ஆகியவை முக்கியமான தொழில்கள்; இதன் மூலம் 2,000 தொழிலாளர்கள் பிழைக்கின்றனர்.

தனியார் நடத்தும் மோட்டார் தொழிலில் 400 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

கடற்கரையோரப் பகுதியில் 5,000-க்கு மேற்பட்ட கயிறு முறுக்கும் தொழிலாளர்கள் உள்ளனர்.

பீடி சுற்றும் தொழிலில் 4,000 பேரும், அரிசி ஆலை, மாவு மில்களில் 350 பேர்களும் பணிபுரிகின்றனர்.

இங்கு ஒரு அதிசயம் உள்ளது—சாலையின் மேல் பாகம் வழியாக கால்வாய் ஓடுவதும், பள்ளத்திலிருந்து மேடான இடத்திற்குத் தண்ணீர் செல்வதும் செயற்கை அழகாகும்.

குமரி எல்லையிலுள்ள மருந்து வாழ்மலையில் அரிய மூலிகைகள் தேங்கிக் கிடக்கின்றன.

வடமலைச்சாரலில் கிடைக்கும் மருந்து மூலிகைகளை மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் எடுத்துச் சென்று, அதனைப் பல அரிய மருந்துகளாகத் தயாரித்து அங்கிருந்து நமக்கு அனுப்புவது, வேதனை தருவதாகத்தான் உள்ளது.

எத்தனை வகையான அரிய மூலிகைகளையும், ஏற்றுமதி செய்வதற்கு எடுத்தவண்ணமிருக்கலாம்; ஆனால், இவற்றிற்கு எருவிடுவாரில்லை! களை எடுப்பாரில்லை! கட்டிக் காப்பாரில்லை!

மாற்றமுடியாத மார்க்சீய சித்தாந்தங்களை சீனக் கம்யூனிஸ்டுகள் மாற்றுகின்றனர்!

'சோஷலிச நிர்மாணத்திற்கு இதர ஜனநாயகக் கட்சிகளும் அவசியமே'

லியோ-ஷா-சி அறிக்கை கூறும் விளக்கம்

மாற்றப்படவே முடியாத நிலையானவை என்று கருதப்படும் மார்க்சீய சித்தாந்தங்கள் சிலவற்றிலிருந்து, சீனக் கம்யூனிஸ்டுகள் விலகிச் சென்றிருப்பதாக, சீனத் தூதுவராலயம் வெளியிட்டுள்ள சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் தஸ்தாவேஜுகள் கூறுகின்றனவாம்.

சீனக் கம்யூனிஸ்டுகள், கருத்து மாறுபாடுகொண்டுள்ள மார்க்சீய சித்தாந்தங்கள் மிக முக்கியமானவையாகும்.

கம்யூனிஸ்டுக் கொள்கையின் படி, சோஷலிசம் நிர்மாணிக்கப்படுவதற்கு, கம்யூனிஸ்டுக் கட்சி, வேறு எந்த ஒரு கட்சியையும் வாழ அனுமதிக்க முடியாது என்று இதுவரை கூறப்பட்டு வந்திருக்கிறது; ஆனால் சீனக் கம்யூனிஸ்டுகள் இந்தக் கொள்கையை முறித்திருக்கிறார்கள்.

சீனக் கம்யூனிஸ்டுகளின் பிரதான தத்துவாசிரியர் என்று கருதப்படும் லியோ-ஷா-சி என்பார், சீனக் கம்யூனிஸ்டு காங்கிரசில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:—

"கம்யூனிஸ்டு கட்சியும் இதர ஜனநாயகக் கட்சிகளும் நீண்ட காலத்திற்குக் கூடிவாழவேண்டும் என்றும், அவைகள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் மேற்பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் விதிக்கிற ஒரு கொள்கையை இனி முதல் நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்று கருதுகிறோம்.

"சீனாவில் உள்ள தேசிய பூர்ஷுவாக்கள், நடுத்தர—சில்லறை பூர்ஷுவாக்களில் மேல் தட்டில் இருப்போர், மற்றும் இந்த வகுப்புகளில் உள்ள அறிவாளிகள் இவர்களை சமூக அடிப்படையாகக் கொண்டவைதான் சீன ஜனநாயகக் கட்சிகள் எல்லாம்!

"சோஷலிஷ அமைப்பு முழுமையுறும்போது, இந்த தேசிய பூர்ஷுவாக்களும் சில்லறை பூர்ஷுவாக்களும் தொழிலாளவர்க்கத்தின் உறுப்பினர்களாகிவிடுவர்.

"ஆனால் பூர்ஷுவா தத்துவப் பிடிப்புடைய எச்சசொச்சமானோர், தொழிலாளிவர்க்கத் தத்துவ சிந்தனைக்கு எதிராக வாதிடுவார்களாதலால் நீண்ட நெடுங்காலத்திற்கு அவர்களோடு தொடர்பு கொள்வதற்காகவும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காகவும், அவர்கள் தங்களைத் தாங்களே உருமாற்றிக் கொள்ள உதவுவதற்காகவும் ஜனநாயகக் கட்சிகள் தேவைப்படுகின்றன.

"அதே நேரத்தில், ஜனநாயகக் கட்சிகள், கம்யூனிஸ்டுக் கட்சியோடு ஒத்து வாழும்போது, ஒன்றை ஒன்று மேற்பார்த்துக் கொள்ளவும் முடியும்.

"சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்குத் தொழிலாளி வர்க்கம், தேசிய பூர்ஷுவாக்களுடன் இணைந்து நிற்பது, பூர்ஷுவாக்களை உருமாற்றுவதிலும், அவர்களுக்கு சோஷலிச ஞானமூட்டுவதிலும் உருவான காரியம் ஆற்றியிருக்கிறது

"இந்த இணைப்பின் மூலமாக—கூட்டுறவின் மூலமாகவே அவர்களை ஒன்றுபடுத்தவும், அறிவு பெறச் செய்யவும், உருமாறச் செய்யவும் ஆன காரியங்களை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும்.

"சீன விவசாயத் துறையில், பரஸ்பரக் கூட்டுறவின்மூலம் அமையும் இயக்கங்கள் மூலம்தான் சோஷலிசத்தைக் கட்டமுடியும்.

"தனிப்பட்ட முதலாளிகளின் வசமுள்ள தொழில்களை சர்க்காரும்—முதலாளிகளும் கூட்டாகச் சேர்ந்து நடத்துவதுதான் தொழில் வர்த்தகத்துறைகளில் சோஷலிசத்தைக்கொண்டு வருவதற்கான பிரதானமான வழியாகும்"

எவ்வளவு தெரியுமா?

குடிசைத் தொழில், சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து இந்திய சர்க்கார் 1955—56-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 3,41,14,000 பெறுமானமுள்ள சாமான்களை வாங்கினர். அதற்கு முந்திய ஆண்டில் அவர்கள் வாங்கிய சாமான்களின் மொத்த மதிப்பு ரூ. 105 இலட்சமாகும்.

‘அடிமை மனப்பான்மையில் உழலுகின்றனர்’

‘பெண்களிடை உரிமை மனப்போக்கு அரும்ப வேண்டும்’

மகளிர் மன்றத் துவக்க விழாவில்

வெற்றிச்செல்வி—அன்பழகன் வரவேற்புரை

“மற்ற நாடுகளிலெல்லாம் பெண்கள் எவ்வளவோ முன்னேறி இருக்கிருர்கள். ரஷ்யா, சீன அமெரிக்கா போன்ற நாடுகளில் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்; எந்த ஒரு துறையிலும் பெண்கள் ஈடுபடாமல் இருப்பதில்லை. பொதுவாக அவர்களிடம் தாழ்வு மனப்பான்மை என்பதே இல்லை அதனுல்தான் அந்த நாடுகள் முன்னேறுகின்றன.

“நம்முடைய நாட்டிலோ, பெண்கள் பன்னெடுங்காலமாக அடிமை மனப்பான்மையிலேயே ஊறித் திளைத்துவிட்டனர் அவர்கள் அந்த மனப்பான்மையிலிருந்து விடுபடுவது எளிதல்ல கல்வி, அறிவு, ஆற்றல், வெளியுலகப் பழக்கவழக்கம் முதலியவை பெருகினுல்தான் சிறிதேனும் உரிமை மனப்பான்மை ஏற்படும் அதற்கு நம்முடைய பெண்கள் மூடநம்பிக்கையை நீக்கி, கண்மூடிப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காகவே, பெண்களிடம் பிரச்சாரம் செய்வதற்கும், அவர்களிடையே ஒரு தெளிவை உண்டாக்குவதற்கும் இந்த மன்றம் தோன்றியுள்ளது,”

—என்று, தோழியர் வெற்றிச்செல்வி-அன்பழகன், மகளிர் மன்றத் துவக்க விழாவில் வரவேற்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னர் :—

‘மகளிர் மன்றம் பொதுவாக பெண்கள் முன்னேற்றத்திற்கும்—குறிப்பாகத் தாய்மார்கள் திராவிட இனப் பற்றுக்கொண்டு தாய் நாட்டின் விடுதலைக்கு பாடுபடுவதற்காகவும் தோன்றியதாகும்

“‘பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு, மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே’ என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியுள்ளது உண்மையன்ருே! இந்த மன்றம் அந்த இலட்சியத்துடனேயே தோன்றியுள்ளது. இப்பொழுது ஏறத்தாழ 150 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்; இன்றும் பலர் உறுப்பினர்களாக வேண்டும் என்பதே எங்கள் ஆசை; அந்த முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளோம் இந்த மன்றத்தின் வளர்ச்சியைக் கருதி நாங்கள் கேட்டவுடன் பலர் நன்கொடை அளித்துள்ளனர்; அவர்கட்கெல்லாம் நாங்கள் நன்றி செலுத்துகிறோம்

‘இன்று நிகழும் மகளிர் மன்றத்தின் துவக்க விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நாங்கள் விரும்பினோம்.

பெண்ணுலகின் இரு கண்கள்

“உடனே எங்கள் நிலைவிற்கு வந்தவர்கள் பெண்ணுலகத்தின் இரு கண்கள் எனத்தகும் நமது மூதாட்டிகளேயாவர். மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார் அவர்களது பெருமையைத் தமிழ் நாடு நன்கறியும்; சுயமரியாதை இயக்கத்திற்கும்—திராவிட மக்களுக்கும் அவர்கள் செய்துள்ள தொண்டு மிகப்பெரிதாகும். சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்பெல்லாம் காங்கிரசில் சேர்ந்து பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்கள் அவர்கள்; ஏறத்தாழ 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து பொதுப் பணியாற்றிய அவர்கள், வயது 70-க் கடந்தும், தள்ளாடிக்கொண்டே தடி யூன்றி நடந்தபோதிலும், தாம் கடமையை மறவாது, கொள்கையைக் கைவிடாது பணிபுரிவது நமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகும். அம்மூதாட்டியார், ஆதிநாட்களில் பெண்களை இழிவுபடுத்தும் விதத்தில், பொட்டுக்கட்டி கோவிலுக்கு விடுவது என்றிருந்த வழக்கத்தை ஒழிக்கப் பாடுபட்டவர்கள்; வெற்றியும் கண்டவர்கள்; சீர்திருத்தத் திருமணம், புரோகித மறுப்பு. விதவை மறுமணம், இந்தி எதிர்ப்பு, பொருந்தாத் திருமண எதிர்ப்பு—இவைகளிலெல்லாம் முன்னின்றவர்கள்.

தந்தையை இழந்தோம் தாயை இழக்கவில்லை

‘இன்று திராவிடமுன்னேற்றக் கழகம்—தந்தையை இழந்தபோதிலும் தாயை இழக்கவில்லை—என்ற கூறும்படி அதை மகிழ்ந்து போற்றி வளர்க்கும் அன்னையாக விளங்குபவர்கள்; சில மாதங்களுக்குமுன் திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக மாநில மாநாட்டில், மூதாட்டியார் அவர்கள், அண்ணு அவர்களால் பாராட்டப்பெற்று பட்டயம் வழங்கப் பெற்றதைப் பாராட்டாதவர்களே இல்லை. அத்தகு பெருமைவாய்ந்த மூதாட்டியார் இந்த மன்றத்தைத் துவக்கிவைக்க ஒப்புக்கொண்டதற்கும், உடல் நலக் குறைவாக இருந்தபோதிலும் நீண்ட பயணத்தை மேற்கொண்டு இங்கு வந்து சேர்ந்ததற்கும் நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்.

“இந்த விழாவிற்கு டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் தலைமை வகிக்க இசைவு அளித்தது, நமக்கெல்லாம் பெருமையாகும். சில மாதங்களாகவே, அம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவால் படுக்கையிலேயே இருக்கிருர்கள்; நடமாட்டம் இல்லை; என்ருலும், ஒரு மகளிர் மன்றம் உருவாகிறது என்ற உடனேயே வாழ்த்துக் கூறிப் பாராட்டி, இந்த விழாவிற்கு தலைமைத் தாங்கவும் ஒப்புக்கொண்டார்கள். பொதுத் தொண்டிற்கு அவர்கள் ஓர் உதாரணம் எனலாம். ‘டாக்டர்’ என்ற சொல்லுக்கே அவர்களால் பெருமை எனலாம். நோய்க்கு மருந்துதர அவர்களால் முடிந்தாலும் முடியாவிட்டாலும்—தன் நோய்க்கே மருந்து தேட இயலாவிட்டாலும், பிறரது துயர் துடைக்க—வருத்தத்தைப் போக்க அவர்கள் முயற்சிக்காமல் இருப்பதில்லை. யாருக்கு எந்த உதவியானுலும் தாம் செய்யக்கூடிய எதையும் செய்யத் தயங்குவதில்லை—தவறுவதில்லை. அவர்கள் படுத்த நிலையில் இருந்தாலும், ‘தொண்டு’ என்ருல், உடனே அவர்கள் எழுந்துவிடுவார்கள்.

துவண்டிருந்தாலும் தொண்டாற்றத் தவருத டாக்டர்

“அம்மையார் அவர்களது தொண்டினை தமிழ் நாடு நன்கறியும். மாணவர் உலகம், தமிழ் இசை இயக்கம், இந்தி எதிர்ப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்கள் செய்துள்ள பணிகள் பல. அப்படிப்பட்ட பெருமையுடைய அம்மையார் இந்த மன்றத் துவக்க விழாவில் தலைமை வகிக்க இருப்

(4-ம் பக்கம் பார்க்க)

‘ஆண்களைப் போன்றே பலதுறைப் பணியிலும் பங்கேற்போம்’

தோழியர் துரையம்மாள்—சிவப்பிரகாசம் நல்லுரை

“தமிழ் இலக்கியத்திலும், நாட்டிலும் சீரும் சிறப்பும் பெற்றிருந்த நமது தாய்குலம், இடையிலே வந்த இதிகாசங்களாலும் புராணங்களாலும் மறைக்கப்பட்டுவிட்டது. ஆனுல் இன்று விழித்துக்கொண்டுவிட்டது. அறிஞர்களின் அறிவுப் பணியினுலும், கலைஞர்களின் கலை சேவையினுலும் வருங்காலப் பெண்கள் உலகம் நிச்சயம் மேன்மையுறும் என்று உறுதியுடன் நம்புகிறேன்,”

—என்று தோழியர் துரையம்மாள்-சிவப்பிரகாசம் அவர்கள், மகளிர் மன்றத் துவக்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னர்:—

“மகளிர் மன்றம், பெண்கள் முன்னேற்றத்திற்கென்றே—பெண்கள் நலனுக்காகவே—பெண்களாலேயே துவக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டில், பெண்கள் ஆண்களுக்கு அடிமையாகவும் அவர்களுக்கு வேலை செய்யவும் மட்டுமே பிறந்திருப்பவர்கள் என்று எண்ணுகின்ற நிலை மாறி, ‘பெண்கள் அதற்குமட்டும் அல்ல—ஆண்களைப் போல பல துறைகளிலும் பங்குகொண்டு நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்,’ என்பதை இந்த மகளிர் மன்றம் செயல் முறையில் காட்டப்போகிறது; அடுப்பங்கரையில் புழங்குவது மட்டும் அல்ல—ஆட்சி நடத்தவும் தெரியும் என்பதையும் விளக்கப்போகிறது.

‘மேல்நாட்டில் இராணி எலிசபெத் ஆட்சி நடத்தவில்லையா? தமிழ் நாட்டில்கூட இராஜராஜ சோழனின் பெரும் புகழுக்குக் காரணமாய் இருந்தவர் குந்தவியார் என்னும் அம்மையார்தானே?

“அரசியலில் மட்டும் அல்ல பெண்களின் பெருமையைச் சொல்லுவது; இலக்கிய உலகிலும் பெண்களின் பெருமையைப்பற்றி காணலாம். இரண்டு தமிழ் குறுநில மன்னர்களுக்குள் நடைபெற இருந்த போரினை, தனது அறிவுசால் உரையினுல் நிகழாமல் தடுத்தார், ஔவை மூதாட்டியார்!

“புறநானூற்றிலேகூட, புலிநிகர் காளைகளைப் புவிக்குத் தந்து புகழ் கொண்ட தாய்மார்களை எத்தனையோ முறை சந்தித்து இருக்கிறோம்.

“பெண்களின் பெருமையை விளக்கும் இந்த மகளிர் மன்றத்தில் ஒவ்வொரு பெண்களும் அங்கத்தினராகச் சேர்ந்து இம்மன்றம் வலிவும் பொலிவும் பெறுமாறு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.”

‘தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை என்பதைக் காட்டுவோம்’

‘தன்மானத்தைப் பறிக்கும் சின்னங்களை அழிப்போம்’

மாணவி சற்குணம் பேச்சு

“மதம், சாத்திரம், கடவுள் இவைகளுக்குப் பயந்து, பல இலட்சக்கணக்கான பெண்கள், படித்துங்கூட அடங்கி ஒடுங்கி ஆமையாய்—ஊமையாய் இருக்கிருர்கள். இவர்களிடத்திலெல்லாம் தன்மான உணர்ச்சியை ஊட்ட வேண்டும். இங்கு கூடியுள்ள தாய்மார்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகின்றேன்—காலம் வெகுவேகமாக முன்னேறி வருகிறது; தன்மான இயக்கத்தைச் சேர்ந்த மகளிர்கள் எல்லாம் வீடுவீடாக-குடும்பம் குடும்பமாகத் தன்மானப் பிரச்சாரத்தில் இறங்க வேண்டும். நூற்றுக்கணக்கான மகளிர்களை, மகளிர் மன்றத்தில் உறுப்பினராக்க வேண்டும் அப்படிச் செய்தால்தான் மகளிர் மன்றத்தின் மூலம் பெரும் புரட்சியை மகளிர் குலத்திடையே உண்டுபண்ணி மகளிர் குலத்தை தன்மானம் உள்ளவர்களாக ஆக்க முடியும் தன்மானம் மகளிர்களின் உயிர்நாடியாகும்.”

—என்று, மாணவி பி. சற்குணம், மகளிர் மன்றத் துவக்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியதாவது :—

“மகளிரின் குலத்திற்கென ஒரு அமைப்பு ஏற்பட்டிருப்பது கண்டு நமக்கு மட்டில்லா மகிழ்ச்சிதான். தன்மானப் பற்றும், தமிழர் நல உணர்ச்சியும் கொண்ட மகளிர்களாலேயே மகளிர் மன்றம் ஏற்பட்டு இருக்கிறது. ‘பெண்களுக்கென ஒரு அமைப்பு எங்களிடம் தான் இருக்கிறது’ என்று காங்கிரஸ் கட்சியினர் இறுமாந்து இருந்தார்கள். ‘மாதர் காங்கிரஸ்’ என்ற அமைப்பை வைத்துக்கொண்டு மயிலையும், மாம்பலமும் ஆண்டு தோறும் மாநாடு நடத்துவார்கள்; ஆட்டமும், பாட்டும்தான் அவர்கள் கண்ட பலன்!

“1917-ல், சென்னையில் அன்னி பெசண்ட் என்ற அம்மையாரால் மகளிர் குல மறுமலர்ச்சிக்காக ‘இந்திய மாதர் சங்கம்’ திறக்கப்பட்டிருக்கிறது; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்களால் ஒரு சில நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது; ஆனுல், 40 ஆண்டுக் காலமாய் மகளிர் குல மறுமலர்ச்சிக்காக இவர்களால் பெண்கள் இனத்தினிடையே பெரும் புரட்சியை உண்டுபண்ண முடியவில்லை.

“தன்மான இயக்கத்தைச் சேர்ந்த நம் அரும் பெரும் தலைவர்கள், ஆரியத்தால் கட்டப்பட்ட வைதீக கோட்டையைப் பகுத்தறிவு பீரங்கி கொண்டு, எதிர்ப்புக்கும் ஏசிற்கும், கலடிக்கும் சொல்லடிக்கும் அஞ்சாமல் தகர்த்தெறிந்த பின்புதான், பெண்களின் நலனுக்காக ஒருசில சட்டம்கூட சர்க்காரால் செய்ய முடிந்தது. மகளிர் குல மறுமலர்ச்சிக்காக, தன்மான இயக்கத்தைச் சார்ந்த நம்மால்தான் பல புதுமையான காரியங்களைச் செய்ய முடிந்தது.

“நாம் நாட்டில் துணிந்து செய்த பகுத்தறிவு பிரச்சாரம் நல்ல பயன் தந்தது. ‘அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?’ என்ற எண்ணம் தவிடுபொடியாக்கப்பட்டது ‘விதவைக்குத் திருமணமா? இது அடுக்குமா?’—என்றனர், மதவாதிகள்! வைதிகம் தலைகுனிய, விதவைத் திருமணங்கள் பல இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்றது! மகளிர் குலம் மறுமலர்ச்சி அடைந்தபின், நல்ல பல காரியங்கள் நாட்டில் நடைபெற்று வருகிறது.

“நமது மகளிர் மன்றத்தின் சார்பில், மகளிர் குல மறுமலர்ச்சிக்காக இன்னும் பல காரியங்களை நாம் செய்யவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

‘பெண்கள் திருந்தினுல் நாடும் திருந்தும்’

‘மகளிர் மன்றம்—‘லேடீஸ் கிளப்’ போன்றது அல்ல’

‘நாமும்—நாடும் வாழ பாடுபடுவோம் வாரீர்’

மகளிர் மன்றத் துவக்க விழாவில்

தோழியர் இராணி — அண்ணுதுரை அன்பழைப்பு

“பெண்கள் சீர்திருத்தத்துடன் நடக்க ஆரம்பித்தால், பின்பு அந்தக் குடும்பம் முழுமையுமே சீர்திருத்தக் குடும்பமாகிவிடும். குடும்பத்திற்கு முக்கியமாக இருக்கிற பெண் அறிவுடையவளாகிவிட்டால் குடும்பமே அறிவுடைய குடும்பமாகிவிடும். இவ்வாறு குடும்பங்கள் நல்ல விதத்தில் திருந்தினுல் சமூகமும், நாடும் திருந்திவிடும். ஆதலால் பெண்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதன்மூலம் நாட்டைச் சீர்திருத்த முடிகிறது. மகளிர் மன்றம் அந்த முக்கியமான பணியை ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன்,”

என்று, தோழியர் இராணி-அண்ணுதுரை அவர்கள், மகளிர் மன்றத் துவக்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

“மகளிர் மன்றத் துவக்க விழாவில் என்னைப் பேசும்படி மன்றத்தினர் கேட்டுக் கொண்டதற்கு என்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மகளிர் மன்றம் என்றதும் பலருக்கு—அதிலும் ஆண்களுக்கு, ‘ஏன் இந்த மன்றம்?’ என்று தோன்றலாம். பெண்களில் சிலர் கூட, இப்படி, ‘மகளிர் மன்றம் என்று ஒன்று வேண்டுமா?’ என்று கேட்கக்கூடும். சென்னை போன்ற இடங்களில்—அதுவும் மைலாப்பூர், மாம்பலம் போன்ற இடங்களில் ‘லேடீஸ் கிளப்’புகள் என்ற பெயரில் மாதர்களுக்காக இருக்கின்றன. மகளிர் மன்றம், ஒரு ‘லேடீஸ் கிளப்’பைப் போன்றது அல்ல என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும் ‘லேடீஸ் கிளப்’ என்ருல், வெறும் பொழுதுபோக்குச் சங்கம். பெரிய வீட்டுப் பெண்கள் உல்லாசத்திற்கு மாலை வேளைகளில் அங்கு கூடிக் கலந்து விடுவார்கள். அந்த ‘லேடீஸ் கிளப்’புகளுக்குவேடிக்கை—விளையாட்டு, உல்லாசத்தைத் தவிர வேறொன்றும் நோக்கமில்லை.

“நாம் ஆரம்பித்திருக்கும் மகளிர் மன்றம் அப்படிப்பட்ட உல்லாசத்திற்காக அல்ல; நாமும், நமது குடும்பத்தாரும், நமது நாடும் நன்ருக வாழ்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு மகளிர் மன்றம் பாடுபடும்.

மூடநம்பிக்கைகளை மாற்ற!

“மூடநம்பிக்கைகளை மாற்றி, நல்ல கருத்துக்களை எங்கும் பரப்புவதற்கு மகளிர் மன்றம் பாடுபடும்.

“மூடநம்பிக்கைகள் அகலுவதற்கும், சீர்திருத்த எண்ணங்கள் தோன்றுவதற்கும் முக்கியமான

(4-ம் பக்கம் பார்க்க)

கழகக் கூட்டம்

காரைக்குடி :
காந்தி சதுக்கத்தில்
8—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : கண்ணதாசன்
பேசுவோர் :
ஏ. கே. வில்வம்
அருண்மொழி

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

நவ. 6 : பெரியகுளம்
7 : அய்யம்பாளையம்
8 : மாலை 4 மணி மதுரைக் கல்லூரித் தமிழ்ச் சங்கக் கூட்டம்
இரவு 7 மணி சோழவந்தான்
9 : மதுரை
10 : நாட்டரசன்கோட்டை
11 : காரைக்குடி
12 : காரைக்குடி பொறியியல் கல்லூரித் தமிழ்ச் சங்கக் கூட்டம்

ஏ. கே. வில்வம் நிகழ்ச்சிகள்

நவ. 8 : காரைக்குடி—அழகப்பா கல்லூரி
10 : சதுரங்கப்பட்டிணம்
15 : திருவனந்தபுரம்
16 : திருவனந்தபுரம்
18 : திருவனந்தபுரம்

குறிப்பு : காரைக்குடி, சதுரங்கப் பட்டிணம் நிகழ்ச்சிகளில் மட்டும் தோழியர் அருண்மொழி-வில்வம் கலந்துகொள்வார்.

முகவரி மாற்றம்

ஏ. கே. வில்வம்,
2/27, அஜீஸ்முல்க்—
ஒத்தவாடை,
ஆயிரம்விளக்கு தெரு,
சென்னை-6

தேர்தல் நிதிக் கூட்டங்கள்

★

அண்ணா
என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

★

10-11-56 காலை 9-மணிக்கு—அண்ணாமலை நகரில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

10-11-56 மாலை 6-மணிக்கு தஞ்சையில் பொதுக்கூட்டம்—நகர தி. மு. கழகம்.

11-11-56 காலை—திருச்சியில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

குறிப்பு :—இக்கூட்டம் ஒவ்வொன்றிலும் தேர்தல் நிதிக்குப் பெருந்தொகை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காஞ்சி-பிள்ளையார்பாளையம் வேலாயுதம் படிப்பகம் ஆண்டு நிறைவு விழா

8—11—56 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பக ஆண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம், காஞ்சீபுரம்—பிள்ளையார் பாளையம், திருவேகம்பன் தெரு தோப்பில், டி. கந்தசாமி எம்.சி., அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி-கல்யாணசுந்தரம், சி.வி.எம். அண்ணாமலை எம்.சி., ஆகியோர் பேசுவர்.

மகளிர் மன்றத் துவக்க விழா - [3-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணி-அண்ணாதுரை

இடங்கள், முதலாவதாக, நமது குடும்பங்களாகும். முதலில் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் முக்கியமான காரியங்கள் சீர்திருத்த மாக நடைபெற நாம் உதவ வேண்டும்.

பரம்பரைப் பழக்கமும் பயப்படும் பெண்களும்

"தலைமுறை தலைமுறையாக நடைபெற்ற வழக்கங்களை மாற்றிப் புதிதாக ஏதாவது ஒன்று செய்வதென்றால், நமது தாய்மார்கள் பலருக்குப் பயம் உண்டாகலாம். அப்படிப் பயப்படும் தாய்மார்களுக்குள்ள பயத்தைப் போக்கி சீர்திருத்த வழியில் அவர்களைப் போகும்படி நாம் செய்ய வேண்டும்.

"பழைய வழக்கங்களை மாற்றி சீர்திருத்தங்களைச் செய்யத் தாய்மார்கள் மட்டும் பயப்படுவார்கள் என்று சொல்லமுடியாது; பெண்களைவிட ஆண்கள்தான் அதிகம் பயப்படுவார்கள். ஆனால், வெளியில் யாராவது கேட்டால், 'வீட்டில் பெண்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று பெண்கள்மீது பழி போட்டுவிடுவார்கள். அவ்வாறு நம் மீதுபழிபோடாதவாறு பெண்களாகிய நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

உரிமைகள் ஏட்டளவில் தானே ?

"நமது நாட்டில், பெண்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. 'சம நீதி', 'சம உரிமை' என்று ஏட்டளவில் பலர் எழுதினால்கூட, பெண்களுக்கு உரிமையானவைகள் தரப்படவில்லை. முதலாவதாக, பெண்கள், கல்வியறிவு தரப்படாமல் இருக்கிறார்கள்; அதற்குக் காரணம், பலப் பல இருக்கலாம். வசதி இல்லாததால் பல பெண்களால் படிக்க முடியவில்லை. 'படித்து என்ன பலன் — என்ன அவசியம்' என்று சிலர், பெண்களைப் படிக்க வைக்காமலிருக்கலாம்.

பெண்களுக்கும் கல்வி வேண்டும்

"ஒரு குடும்பத்தில் ஆண்களைப் படிக்க வைப்பதில் காட்டும் அக்கறையை பெண்களைப் படிக்க வைப்பதில் காட்டுவதில்லை. இந்த நிலை மாறி, பெண்களையும்படிக்கவைத்து அறிவுடையவர்களாக ஆக்கவேண்டும்.

"பெண்கள் கல்வி விஷயத்தில், தனிப்பட்டவர்களைவிட, அரசாங்கம் அதிக ஊக்கம் தரவேண்டும்; அதிக வசதிகள் செய்து தரவேண்டும்; பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெண்கள் இலவசமாகப் படிப்பதற்கு அனுமதி தரவேண்டும். வசதியற்ற ஏழைப் பெண்களுக்கு தனியாகத் தங்கும் விடுதிகளும் பண உதவியும் செய்யவேண்டும். சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்புகள் என்பவர்களுக்கு விசேட சலுகைகள் அரசாங்கம் தருவதுபோல, பெண்களுக்கும் விசேட சலுகைகள் தரப்பட வேண்டும். ஏனெனில், சமூகத்தில் பெண்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம், பெண்களுக்குத் தனியாக உரிமைகள்—உதவிகள் அளித்து, கல்வித் துறையில் பெண்கள் முன்னேற்றமடைய உதவ வேண்டும். கல்வியறிவு பெற்றுப் பெண்கள் முன்னேறினால்தான் குடும்பத்தில் அறிவு வளர்வதுடன், நாடும் முன்னேற்றமடையும். பெண்கள் கல்வி விஷயத்தில் மகளிர் மன்றம் தன்னாலான முயற்சிகளைச் செய்வதுடன் அரசாங்கத்தின்கவனத்தை திருப்புவதற்கும் பாடுபடும்.

"பெண்களிடை பணியாற்றுவதற்கு மகளிர் மன்றம் முதன்மையான மன்றமாக இருக்கும். அதற்கு உதவியாகப் பல பேச்சாளர்களும் இருப்பார்கள் என்று நம்புகிறேன். திராவிடப் பெண்கள் அனைவரும் மகளிர் மன்றத்திற்கு ஆதரவு தந்து, நாட்டுக்கு நல்ல பணியாற்ற வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்."

வெற்றிச்செல்வி—அன்பழகன்

பது மன்றத்திற்கே ஓர் சிறப்பாகும். அவர்களுக்கு நமது நன்றி.

"மூதாட்டியார் இருவரும் இன்னும் பல்லாண்டுகள் உடல் நலத்தோடு வாழ்ந்து நமக்கு வழிகாட்ட வேண்டும் என்று அனைவர் சார்பாகவும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க மூதாட்டிகள்—நம் வழிகாட்டிகள்

"வாழ்க மூதாட்டிகள்! வாழ்க நம் வழிகாட்டிகள்! இந்த விழாவில் நமக்கெல்லாம் அறிவுரை வழங்க அண்ணா அவர்கள் இசைந்ததும் வந்திருப்பதும் நமக்குப் பெருமையாகும். அவர்கள் இன்று எவ்வளவு பெரிய கடமைகளை ஏற்றுக்கொண்டுள்ளார்என்பதையும் அவர்களுக்கு ஓய்வில்லை என்பதையும் நாம் அறிவோம். மகளிர் மன்றத்திற்கு அறிவுரை கூறவேண்டியதும் அவர்களதுகடமையேஎன்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நாங்கள் அவர்கள் வந்தே தீரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். அவர்களுக்கு நமது வணக்கமும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மன்றத்தின் காப்பாளர்களாகப் பணியாற்ற இசைந்தவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும் மன்றத்தின் உறுப்பினர் அனைவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிப்பதுடன்—உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

மாணவி சற்குணம்

"தாய்மார்களே! தமிழ் நாட்டில் தமிழ்ப் பெண்மணிகளாகப் பிறந்த அத்தனைபேரும் தன்மானிகளாய் வாழ வேண்டும். உயிரினும் மானம் பெரிதென நினைப்பவள் தமிழ்ப் பெண். இதனை தமிழ் நாட்டு வரலாறும், இலக்கியங்களும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. பண்டைத் தமிழ் நூல்களைச் சற்றுப் புரட்டிப் பாருங்கள்—அதில் மகளிர்கள், தன் இனம், தன் நாடு இவற்றின் தன்மானத்தைக் காக்கப் போரிட்டு உயிர் துறந்த செய்திகள் ஏராளமாகக் கிடைக்கும். உங்களுடைய தன்மானத்தைப் பறிப்பது எதுவாயினும் அதற்கு இடம் கொடாதீர்கள்; அரசியல் உங்கள் தன்மானத்தைப் பறிப்பதாயின் அதை எதிர்த்துப் போராடுங்கள்; அதற்காகச் சிறை செல்லவும், தூக்குமேடை ஏறவும் சித்தமாயிருக்க வேண்டும்.

"அதுபோலவே, மதம், கலாச்சாரம் முதலியன உங்கள் தன்மானத்தைப் பறிப்பதாயின், அதைத் தகர்த்து எறியுங்கள்! உங்கள் தன்மானத்தைப் பரிகசிக்கும் சின்னங்களை அழித்தொழியுங்கள்! அப்படிப்பட்ட ஏடுகளை தீயிலிடுங்கள்! மகளிர்களாகிய நாம் இப்படி பெரும் புரட்சிகளில் இறங்கினால்தான் மகளிர் குலத்தினிடையே மறுமலர்ச்சியை உண்டுபண்ண முடியும்! எதற்கும் அஞ்சாதீர்கள்! எனத்தைக் கண்டு மிரளாதீர்கள்! மகளிர் இதயத்திலிருந்து வரும் உரிமையை—நியாய புத்தியைப் பிரித்து எடுத்துவிடும் மதங்கள், அவற்றின் கொள்கைகள், கோட்பாடுகள், நூல்கள், சட்டங்களைத் தூக்கித் தூரப்போடுவோம் வாருங்கள்! 'பெண்கள் சிந்திப்பதா? அது ஆபத்தான காரியம்,' என்ற கருத்து எந்த மூலையிலிருந்து வந்தாலும், எந்த வடிவில் வந்தாலும் அதை நசுக்குவதற்கு முனையுங்கள்! மகளிர் மற்றொரு மனிதனின் அடிமைப் பொருள்—என்ற களங்கம் நிறைந்த கொள்கையை, அழிப்போம் வாருங்கள்!

"மகளிர் குலத்திற்கு விலங்கு போடும் முயற்சியை ஒரு குரல் கொடுத்துக் கண்டிப்போம் வாருங்கள்! 'நாய்' என்று பெண்ணை நினைத்தவருக்குத் 'தாய்' என்று காட்டுவோம் வாருங்கள்!

"தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை—என்பதை காங்கிரசுக்கு எடுத்துரைப்போம் வாருங்கள்!

"நமது முதல் வேலையாக இந்த நாட்டில் மகளிர் குல மறுமலர்ச்சிக்காக இடைவிடாது பகுத்தறிவு பணிபுரியும் தி. மு. கழகத்தை வருகிற பொதுத் தேர்தலில் வெற்றி பெறச்செய்ய நாமெல்லாம் பெரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மகளிர்களாகிய நாம் இப்போதிருந்தே தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கவேண்டும். நமது 'அறிவின் தூதுவர்'கள் சட்டசபையில் அமர்ந்தால்தான், மகளிர் குல மறுமலர்ச்சிக்கான நல்ல பல திட்டங்களை சட்டத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வர முடியும்."

'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'

படத் துவக்க விழாவில் அண்ணா

"சாதாரணமாக இது போன்ற துவக்க விழாக்களில் நான் கலந்து கொள்வது கிடையாது; எனினும், எப்படியோ தோழர் ஆர். ஆர். சந்திரன் என்னை இங்கு வருமாறு செய்துவிட்டார்; துவக்க விழாவும் நான் விரும்புவதுபோல நடைபெற்றிருக்கிறது,"

என்று, 2—11—56 காலையில் வாகினி ஸ்டுடியோவில் நடைபெற்ற 'கல்பனா கலா மந்திர்'யின் 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' எனும் படத்தின் துவக்க விழாவில் கலந்துகொண்ட அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேற்படி படக் கதையின் ஆசிரியரும் அண்ணா அவர்களேதான்.

துவக்க விழாவுக்கு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமை வகித்தார்.

கல்பனா கலா மந்திரின் அதிபர் ஆர். ஆர். சந்திரனின் குழந்தை கல்பனா, காமிராவை முடுக்கிவிட்டது.

விழாவில் பங்கேற்றுக்கொண்ட புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது முதன் முதலாக அண்ணா அவர்களது கதையில் நடிக்கும் வாய்ப்பு தனக்குக் கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டார்.

அவருக்குப் பின், அண்ணா அவர்கள் பேசுகையில், தலைப்பில் தந்தபடி குறிப்பிட்டுவிட்டு "'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' எனும் தலைப்பே ஒரு புதுமையாக இருக்கிறதென்று தோழர் ஆசைத்தம்பி குறிப்பிட்டார். தலைப்பில் மட்டுமல்ல—கதையிலும் பல புதுமைகள் இருப்பதாகக் கருதித்தான் நண்பர் சந்திரன் என்னை அணுகினார். நானும், பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய இக்கதையை ஒரு முறை படித்துப் பார்த்தேன். 'புதுமைகள் இருக்கிறது; புதுமைகளைத் தரமுடியும்,' என எண்ணியே ஒப்புதல் அளித்தேன். இக்கதைக்கு, திரைக்கேற்றவாறு வசனம் அமைக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் தோழர் அரங்கண்ணல் என்னுடனேயே இருப்பவர்—எனது அலுவலகத்தில் இருப்பவர். பலருக்கு; எனது எழுத்துக்கும் அவரது எழுத்துக்கும் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியாது. அழகு தமிழ்நடை எழுதும் ஆற்றல் பெற்றவர். எழுத்தில் மட்டுமல்ல-கருத்திலும் அப்படியே ஆகவே, பல புதுமைகள் நிச்சயம் கிடைக்கும்" என்றார்.

இறுதியில், மேற்படி கதைக்கு வசனம் எழுதவிருக்கும் 'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் அரங்கண்ணல் பேசுகையில், "எனது ஆசானும், தந்தைக்கு ஒப்பாருமான அண்ணா அவர்களின் கதைக்கு வசனம் எழுத வாய்ப்பளித்தமைக்கு, ஆர். ஆர். சந்திரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறிவிட்டு, கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் கல்பனா கலா மந்திர் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தோழர் ஆர். ஆர். சந்திரன் அவர்கள் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கும் இப்படத்தில், எம். ஜி. இராமச்சந்திரன், பானுமதி, கண்ணாம்பா, தங்கவேலு, டி. பாலசுப்பிரமணியம், எம். ஜி. சக்கரபாணி, இ ஆர். சகாதேவன், ஆர். பாலசுப்பிரமணியம், ஈ. வி. சரோஜா முதலியோர் நடிக்கிறார்கள். யாகினி ஸ்டுடியோவில் படப் பிடிப்பு நடைபெறும். இசையமைப்பு : டி. ஆர். பாப்பா.

கேரள மாநிலத்தின் பற்றுக்குறை !

புதிய கேரள மாநிலத்தின் அடுத்த ஐந்து மாதங்களின் வரவு ரூ. 13,12 42 600 என்றும் செலவு ரூ 13,58,94 600 என்றும் மொத்தம் ரூ 46,51,900 துண்டு விழுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

நவம்பர் 11:

தமிழக அமைப்பு நாள் விழா

★

அகத்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நாஞ்சில் பகுதியைச் சார்ந்த நான்கு வட்டங்களும், செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியும், நவம்பர் முதல் நாளிலிருந்து தமிழ் மாநிலத்துடன் இணைந்துள்ளதை வரவேற்று மகிழவும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சின்—சித்தூர், பாலக்காடு ஆகிய வட்டங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மாநிலத்தோடு இணைக்கும்படி மத்திய—மாநில அரசியலாரை வற்புறுத்தவும், நவம்பர் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை தமிழக அமைப்பு நாள், விழாவாகக் கொண்டாடும்படி நாடெங்கிலுமுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நவம்பர் 2-ம் நாளன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நாகர்கோயிலில் நடைபெற்ற இணைப்பு விழாவில் நான் கலந்துகொண்டு நம் கழகச் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.

அன்பன்

'அறிவகம்'
சென்னை-13
5 11—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.